


- வாழ்வோம்

எம்.மஸ்தான் ; நெல்லையின் தேசிங்கு ராஜா!



1964-ஆம் ஆண்டு, நெல்லை இந்தி எதிர்ப்பு மாநாடு. இலட்சக்கணக்கான கழகத்தினர் திரண்டிருந்த அந்த மாநாட்டை, நேர்த்தியாக ஒழுங்குபடுத்திய தொண்டர் அணித் தலைவரைப் பேரறிஞர் அண்ணா, அந்த மாநாட்டு மேடையிலேயே புகழ்ந்தார். 'இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான மாநாட்டை நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி, அமைதியான முறையில் அனைவரையும் அமர வைத்து, கூட்டத்தைக் கட்டுப்பாடுடன் நெறிப்படுத்துகிறாரே யார் இந்த 'சர்க்கிள் இன்ஸ்பெக்டர்' என்று ஆர்வமுடன் பார்த்தால், அருகில் வந்தபின்தான் தெரிகிறது, நமது அருமைத் தொண்டர்படைத் தலைவர், 'தம்பி மஸ்தான்' என்று' எனப் பாராட்டினார். நெல்லை மாவட்டக் கழக வரலாற்றில் அழுத்தமாக இடம்பெற்றவர். 'நெல்லை மஸ்தான் நெல்லைக்குக் கிடைத்த தேசிங்கு ராஜா' என்றும்' 'மாவீரன்', 'தளபதி' என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு. நெல்லைக் கழகத்தினர் இன்றும் 'மாமா மஸ்தான்' என்று அன்புடன் நினைவுகூர்கின்றனர்.

இளம்வயதிலேயே திராவிட இயக்கப் பற்று கொண்டு செயல்படத் தொடங்கியவர். கழகத்தின் தொடக்க காலத்திலேயே உறுப்பினரானார். கழகத்தின் தொடக்க காலங்களில், நெல்லையில் கழக முன்னோடிகள் பலருடன் இணைந்து கழகத்தினைப் பலப்படுத்தியவர்.

'மிகச் சிறந்த கழகச் செயல்வீரர். அந்தக் காலத்தில் புல்லட் பைக்கில் ஊர் ஊராக வலம்வந்து கட்சியைப் பலப்படுத்தியவர். அண்ணா காலத்தில் தி.மு.க.வில் தொண்டர் படைத் தளபதியாய்த் திகழ்ந்தவர்' என நெல்லைக் கழகத்தினர் நினைவுகளில் இருக்கிறார், மஸ்தான்.

1954-ஆம் ஆண்டில் நடைபெற்ற நெல்லை மாவட்ட இரண்டாவது மாநாட்டில், நெல்லை முன்னோடிகளுடன் இணைந்து, மாநாட்டினைச் சிறப்புடன் நடத்தியவர். *1964*-ஆம் ஆண்டில், இந்தி எதிர்ப்புச் சட்ட நகல் எரிப்பு அறப்போட்டத்தின்போது, பேரறிஞர் அண்ணா கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்த நேரத்தில் - தாராபுரம், நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் கழகத்தினர் வெற்றி பெற்றனர். நெல்லை நகர் மன்றத் தலைவராக அப்துல் மஜீத் வெற்றிக்குப் பாடுபட்ட மஸ்தானின் உழைப்பை, காஞ்சியில் எழுதிய **'தம்பிக்கு'** கடிதங்களில் அப்போதே குறிப்பிட்டார் அண்ணா.

"நெல்லை, கழகத்தின் எழுச்சிமிக்க இடமாகி வருவதை, இந்தி எதிர்ப்பு மாநாட்டின்போதே நான் கண்டு பெருமிதம் கொண்டவன். அங்கு, நகராட்சி மன்றத் தலைவராகக் கழகத் தோழர் ஓர் இளைஞர், இஸ்லாமிய சமூகத்தினர் வெற்றி பெற்றிருப்பது, பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது. நெல்லை உணவு விடுதியில் என்னைச் சூழ்ந்துகொண்டு உற்சாகமாக உரையாடிய கழக நண்பர்களை எல்லாம், நான் இங்கிருந்தபடியே காண முடிகிறது. ஓடி ஆடிப் பணியாற்றும் மஸ்தானும், வாடிவிடத்தக்க அளவு பணியாற்றினாலும் புன்னகையை இழக்காத இரத்தினவேல் பாண்டியனும், மற்ற தோழர்களும், என் எதிரே நின்றுகொண்டு, 'எப்படி அண்ணா! நெல்லை!' என்று கேட்பது போலவே தோன்றுகிறது' என மஸ்தான் உழைப்பைப் பதிவுசெய்கிறார்.

182

உடன்பிறப்பே

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எம்.மஸ்தான் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

தேர்தல் களங்கள்

1957-ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர். *1958*-ஆம் ஆண்டு தூத்துக்குடி இடைத்தேர்தலில், கழக வேட்பாளர் இராமவெள்ளையன் போட்டியிட்டபோது, கழகத்தினருடன் தீவிரமாக உழைத்தார். *1968*-ஆம் ஆண்டு கழகம் ஆட்சி அமைத்த பின்னர், தென்காசியில் நடைபெற்ற இடைத்தேர்தலுக்கு, கழக வேட்பாளர் கா.மு.கதிரவன் அவர்களுக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞருடன் ஓய்வின்றிச் சுழன்றவர், மஸ்தான் அவர்கள்.

1960-களில் நெல்லை வட்டச் செயலாளராகப் பணியாற்றியவர். நெல்லை நகரச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளரானார். அதன் பின்னர் ஒருங்கிணைந்த நெல்லை, தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராகவும் திகழ்ந்தவர். *1962* -ஆம் ஆண்டு, நெல்லைக் கழக முன்னோடி என்.வி.நடராசன் தலைமையில் நடைபெற்ற விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தில், கைதுசெய்யப்பட்டு சிறை சென்றார். *1964*-ஆம் ஆண்டு, 'இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டம்', 'சட்ட நகல் எரிப்புப் போராட்டம்' ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை சென்றார். *1976*-ஆம் ஆண்டு, மிசா காலச் சிறை என கழகத்துக்காகச் சிறை செல்லவும் தயங்காதவராகத் திகழ்ந்தவர் மஸ்தான்.

1980-ஆம் ஆண்டில், அவர் மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக இருந்தபோது, நெல்லை மாவட்டக் கழக மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின்போது, நன்கொடை, நுழைவுக் கட்டணம்மூலம் தலைமைக் கழகத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் நிதி வசூல்செய்து கொடுத்தவர்கள், நெல்லைக் கழகத்தினர். அதில் பெரும்பங்கு வகித்தவர் மஸ்தான். நெல்லை மாவட்டக் கழக முன்னோடிகள் ரத்தினவேல்பாண்டியன், கா.மு.கதிரவன், மு.ப.அழகியநம்பி, மு.மஸ்தான், சூரியநாராயணன், ஆ.கருப்பையா, விஸ்வநாத பாண்டியன், ஏ.எல்.சுப்பிரமணியன் ஆகியோருடன் இணைந்து செயல்பட்டு, தனது இறுதி மூச்சு வரை கழகத்திற்குத் தொண்டாற்றியவர்.

கழகமே உயிர்மூச்சாக இயங்கிய மஸ்தான் அவர்கள், *22.02.1984* அன்று பாளையங்கோட்டை ரயில் நிலையம் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக இயற்கை எய்தினார். 'அவரது இழப்பு, நெல்லைக் கழகத்தினருக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு. எனக்கும் தனிப்பட்ட வகையில் பேரிழப்பு' என 'முரசொலி' இரங்கலில் எழுதினார் கலைஞர்.

அவர் மறைந்தாலும், அவரது உழைப்பினையும் தியாகத்தையும் கழகம் என்றென்றும் மறக்காது என்பதற்கு ஏற்ப, இன்றும் ஒவ்வோர் ஆண்டும் அவரது நினைவு நாளில் கழகத்தினர் திரண்டு, அவரது புகைப்படத்துக்கு மரியாதை செய்கின்றனர்.

'நெல்லை மாவட்டக் கழக வரலாற்றினை, ஒரு மேடையில் கலைஞர் பகிர்ந்து கொண்டபோது, சிங்கத்தின் பார்வையுடன் நெல்லையில் கழகம் வளர்த்தவர்கள் என கோவில்பட்டி வள்ளிமுத்து, வீரபாகு, கே.வி.கே.சாமி, எம்.எஸ்.சிவசாமி, நெல்லை பேட்டை மஸ்தான் எனத் தனது நினைவில் இருந்து பெருமையுடன் குறிப்பிட்டு, 'இவர்களெல்லாம் அரும்புமீசை வைத்த இளைஞர்களாக, தொண்டர்களாக, சிங்கிள் டீயைக் குடித்துக்கொண்டே ஓடியாடி உழைத்தவர்கள் என்ற பாராட்டுக்கு உரித்தானவர்களாகப் பாடுபட்ட நம்முடைய கழகக் கண்மணிகள்' என்றார். அப்படியான கண்மணிகளை ஆண்டுகள் கடந்தாலும் கழகம் மறக்காது.

...துடிக்கும்

நீரை.மகேந்திரன்

சிந்தனையாளர்களுக்கு எச்சரிக்கையா?

``இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கிறது. இந்தியப் பொருளாதாரம் மோசமான காலகட்டங்களில் சிக்கித் தவித்தபோதுகூட தமிழ்நாட்டின் விலைவாசி, கட்டுக்குள் இருந்தது. இதை அரசு கவனிக்க வேண்டும்" என்று தனியார் தொலைக்காட்சி நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் (MADRAS INSTITUTE OF DEVELOPMENT STUDIES) பேராசிரியர், ஆய்வறிஞர் கலையரசன். த.வெ.க. அரசையோ, முதலமைச்சர் குறித்தோ எதுவும் நேரடியாகச் சொல்லாத நிலையில்.. அவரை காவல் துறை மிரட்டி, அலைக்கழித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், கடும் எதிர்ப்பினையும் சந்தித்துள்ளது. இது தொடர்பாகத் தனது `D NATION' ஊடகத்தில், `தமிழ்நாடு போலீஸ் ஸ்டேட்டை நோக்கி வேகமாக நகர்கிறது' என விமர்சனம் செய்துள்ளார், நெல்சன் சேவியர். அவரது எக்ஸ் தளப் பதிவிலிருந்து...

`இதை எப்படி எதிர்கொள்வது? பேராசிரியரை என்ன செய்யலாம்?

STEP 1: முதலில் இன்ஸ்டாகிராமில் அவரது புகைப்படம் மற்றும் பெயரைப் பயன்படுத்தி, ஒரு போலி அக்கவுன்ட் தொடங்குவது.

STEP 2: அந்த FAKE அக்கவுன்டிலிருந்து, ஒரு த.வெ.க. எம்.எல்.ஏவை சகட்டுமேனிக்குத் திட்டுவது.

STEP 3 : நேராக, அதிகாலை 4 மணிக்கு அவரது வீட்டிற்குப் போய், தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பி, சீருடை இல்லாமல், போலீஸ் வாகனமும் இல்லாமல் விசாரணை என்ற பெயரில் அவரைக் கடத்திச்செல்வது.

STEP 4: தனக்கு இன்ஸ்டாகிராமில் அக்கவுன்டே இல்லை என அவர் கூறியும், அவரை அலைக்கழித்துவிட்டு, திரும்ப அப்படியே விட்டுவிடுவது.

அரசுக்கு எதிராகப் பேசினால் என்னவெல்லாம் நடக்கும் தெரியுமா? எனக் கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வறிஞர்கள், சிந்தனையாளர்களுக்கு விடப்பட்டிருக்கிற நேரடி எச்சரிக்கை இது.

பேராசிரியர்மீது புகார் கொடுத்தது யார்? வழக்கு எங்கு பதிவானது? விசாரணை இல்லாமல் ஏன் கைது? அதுவும் குற்றவாளியைப் போல மிரட்டியது ஏன்? போலீஸ் சீருடை இல்லாமல் வந்தவர்கள் உண்மையிலேயே போலீஸாரா? எதன் அடிப்படையில் அவர் கடத்தப்பட்டார்? எதற்காக விடுவிக்கப்பட்டார்?

மேற்சொன்ன எந்தக் கேள்வியும் எழாது. கேட்டாலும் பதில் வராது. இதற்குப் பெயர் POLICE STATE' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்



தலைவர் தந்த ஊக்கம்!



எம்.கே.(எ) முத்துகிருஷ்ணன்

2019-ஆம் ஆண்டு, நான் கெங்கவல்லி ஒன்றியத் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன். அதையடுத்து, கழகத் தலைவர் தளபதியார் அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து, வாழ்த்துப் பெறும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தலைவர் அவர்கள், எனது பொறுப்பை விசாரித்து, 'சிறப்பாகச் செயல்பட வேண்டும்' என வாழ்த்தினார். அவர் அளித்த ஊக்கத்தில், கழகப் பொறுப்புகளில் அடுத்தடுத்து சிறப்புடன் செயல்பட்டுவருகிறேன்.

- எம்.கே.(எ) முத்துகிருஷ்ணன், ஒன்றியக் கழகப் பொருளாளர், கொண்டையம்பள்ளி, கெங்கவல்லி ஒன்றியம், சேலம் கிழக்கு.

இதுபோன்ற தரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். தலைமேசி எண் தவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1984

கரூர் மாநாடு - தீ வைப்பு!

-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே, கழகத்தின் மாவட்ட மாநாடுகள் பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெற்றன. கரூர் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, கலைஞர் பேசுவதற்கு முன், கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு அசூயை கொண்டோர், மாநாட்டின் முகப்பில் தீ வைத்தனர். அதையும் மீறி, அந்த மாநாடு சிறப்புற நடைபெற்றது.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900